# ★ மணலாறு காவலரண் மீது புலிகள் தா குதல்

(யாழ்ப்பாணம்)
மணலாறுப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த்தாக்குதலில் இராணுவ காவலரண் ஒன்று தாக்கப் பட்டபோது ஒரு இராணுவ கிப்பாய் கொல்லப்பட்டதுடன் பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 4 இதழ் 36
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 17 — 03 — 1992

## கடற்றொழிலாளர் ஆர்ப்பாட்ட பேரணி

(யாழ்ப்பாணம்)
கடற்றொழிலாளர் எதிர் வரும் 19ம் திகதி காலை மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தவுள்ளார்கள். கடற்றொழிலாளர்களுக்கு இதுவரை காலமும் எதுவித நிவாரணங்களும் வங்கப் படாததைக் கண்டித்து இந்த
(4-ம் பக்கம் பார்க்க)

## மருந்துகள் இல்லாது சலரோக நோயாளர் அவதி

(யாழ்ப்பாணம்)
யாழ். பொது மருத்துவமனை மெடிக்கல் கிளினிக்கில் சலரோக நோயாளர்கட்கு வழங்கப்பட்டுவரும் முக்கிய மருந்துக் குளிகைகள் கடந்த வாரம் முடிவடைந்துள்ளன.
(4ம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி பகுதியில் நேற்று

# பொம்மர், அவ்ரோ அனர்த்தம்

# மும்முனைத்தாக்குதல் ஆரம்பம்

## ஒருவர் பலி, பலர் காயம், வீடுகள் சேதம்

(வடமராட்சி)
வடமராட்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் நேற்றுக்காலை மும்முனைதாக்குதலை ஆரம்பித்தது. கடலிலிருந்து பீரங்கிப் படகுகள் மூலமாகவும், ஆகாயத்திலிருந்து பொம்மர்கள், அவ்ரோ, ஹெலிகொப்டர்கள் மூலமாகவும், பலாலி இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்கள் மூலமாகவும் இந்த மும்முனைத்தாக்குதல்கள் ஆரம்பமாயின இத்தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டார், பலர் காயமடைந்தனர், வீடுகள் பல கடுமையான சேதங்களுக்கு இலக்கானது.
(4-ம் பக்கம் பார்க்க)

## வண்ணை சிவன் இன்று பஞ்ச ரத பவனி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் வாலாம்பிகை சமேத விசுவலிங்க வைத்தீஸ்வர சுவாமி கோவிலின் பஞ்சரத தேர்த் திருவிழா இன்று காலை நடைபெறுகிறது.
(2ம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப்பேசும் மக்களின் மொழி உரிமை உறுதிசெய்யப்பட வேண்டும் - தொண்டா

(கொழும்பு)
அரசியல் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள மொழி உரிமை, சில சமயங்களில் மீறப்பட்டு வருவதாகவும், இதனால் தமிழ் பேசும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் கிராமிய, தொழில்துறை அமைச்சர்எஸ் தொண்டமான் அரசுக்குக் கடித மூலம் வலியுறுத்தி உள்ளார்.

குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களின் வழக்குகள் சம்பந்தப்பட்ட விடயங்களிலேயே மொழி உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும், எனவே தமிழ்பேசும் மக்களின் மொழியுரிமை உறுதி செய்யப்படவேண்டும் என்றும் அவர் அரசை மேலும் அக்கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுள்ளார். (க)

## வவுனியா மாவட்டத்தில் 40 குழாய் கிணறுகள்

[வவுனியா]
வவுனியா மாவட்டத்தில் குடிநீர் பிரச்னையைத் தீர்க்கு முகமாக 40 புதிய குழாய்க் கிணறுகள் மிக விரைவில் அமைக்கப்படவுள்ளன.

இக்கிணறுகள் பெரும்பாலும், சிங்களமக்கள் குடியிருக்கும் பகுதிகளிலேயே அமைக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளையில் இங்கு பழுதடைந்த நிலையிலுள்ள 100 குழாய்க்கிணறுகளில், 50 கிணறுகள் தற்போது பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. (வி)

## க. பொ. த. பரீட்சார்த்திகளுக்கு தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)
இவ்வருடம் நடைபெறவுள்ள க. பொ. த (உயர்தர) பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கு தேசிய அடையாள அட்டைகள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் பந்துல குலதுங்க
(4-ம் பக்கம் பார்க்க)

## வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்டதாக நடிகை கைது

(கொழும்பு)
வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்டதாகக் கருதப்படும் முன்னள் நடிகை ஒருவர் பொலிசாரினால் விசாரணைக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.
(4-ம் பக்கம் பார்க்க)

# இந்திய கடற்படையில் ஏவுகணைப் படகு இணைப்பு

(புதுடில்லி)
இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தரையிலிருந்து தரைக்குப்பாயும் தொலைதூர ஏவுகணை கொண்ட நவீன படகை இந்தியா நேற்று தனது கப்பற்படையில் இணைத்துக் கொண்டது.

சுமார் 90 கோடி ரூபாசெலவில் செய்யப்பட்ட இப்படகுடன் மேலும் 35 படகுகள், கப்பற்படையுடன் இணைக்கும் திட்டம் இந்தியாவில் தயாராகி வருகிறது

இத் திட்டத்தை ராணுவ துணை அமைச்சர்எஸ். கிருஷ்ண குமார் நேற்று தொடக்கி வைத்து உரையாற்றும்போது இது இந்தியாவில் பெருமை மிக நேரமென குறிப்பிட்டார் (கே)

## வவுனியா வாடிவீட்டில் இராணுவ அதிகாரிகள்

(வவுனியா)
வவுனியா வாடிவீடு மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

வவுனியா அரச அதிபரின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் இந்த வாடிவீட்டில் தங்க விரும்புவோர், முதலில் வவுனியா செயலகத்தில் பதிவு செய்து அனுமதி பெறவேண்டும் என்று கூறப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களின் பின்னர் பல லட்சம்
(4-ம் பக்கம் பார்க்க)

ராஜீவ் கொலை விவகாரம்:

## அந்நிய சக்திகள் பெயர்ப்பட்டியல் வெளியானது

(புதுடில்லி)
திரு. ராஜீவ் காந்தி கொலையில் நாட்டில் உள்ள தேச விரோத சக்திகளுக்கு அனுசரணையாக இருந்ததாகக் கருதப்படும் சில அந்நிய நாட்டு சக்திகளின் பெயர்களை அகில இந்திய காங்கிரஸ் கட்சிக் கமிட்டி அண்மையில் வெளியிட்டுள்ளது.

ராஜீவ் கொலையின் பின்னணியில் இருக்கக்கூடிய உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் பற்றி விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜெயின் ஆணைக்குழுவிடமே மேற்படி பெயர்கள் அடங்கிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இவ் அறிக்கை 11 பக்கங்களை கொண்டதாகும் எனவும் கமிட்டிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (க)

# அரசுக்கு எதிரான பாதயாத்திரை நேற்று ஆரம்பம்

(கொழும்பு)
மக்கள் பயமாக்கும் திட்டம் கைவிடப்படவேண்டும், வடக்கு-கிழக்குப் பேரை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும், அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய வேண்டும், மனித உரிமை மீறல் கைவிப்பட வேண்டும், விலைவாசி குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து பிரதான எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 18 நாள் பாதயாத்திரையை நேற்று கொழும்பு விகாரமகாதேவி
(4-ம் பக்கம் பார்க்க)

க. பொ. த. (உயர்தர)

## விணப்பத்திரங்கள்

(யாழ்ப்பாணம்)
கல்விப் பொதுத்தராதர உயர்தர (1991-ம்) ஆண்டுப் பரீட்சைக்கான விணப்பத்திரங்களை யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் கொழும்பு சென்று எடுத்து வருவார் எனத் தெரிய வருகிறது.
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ரான்சிஸ்ரர்கள், I C கள், டயோட், பற்றி சார்சர்கள் மலிவுவிலையில் விற்கப்படுகின்றன. Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, (றெயில்வேகடவையருகாமை) யாழ்ப்பாணம், (எ–1983)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் தனிப் பட்ட முறையிலும் வீடுகளிலும் அளிக்கப்படும் ஆங்கிலச் சேவையைப் பெறவிரும்புவோர் ஞாயிறு தினங்களில் காலை 8–00 — 10–00 மணிக்குள் தொடர்புகொள்ளவும். 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (சி-6065)


### வண்ணை சிவன்

[1–ம் பக்கத் தொடர்ச்சி]

காலை 6 மணிக்கு கொடித்தம்ப பூசையும், 6.45 க்கு வசந்த மண்டப பூசையும், 7.45 மணிக்கு சுவாமி எழுந்தருளலும் நடைபெற்று 8.15 க்கு சுவாமி தேருக்கு எழுந்தருளுவார்.

காலை 8.30 மணிக்கு வடம் பிடித்தல், 8.30 தொடக்கம் 11.30 வரை வீதிவலம் வரல், 11,30 தொடக்கம் 12.30 மணிவரை அர்ச்சனை. 12.30 மணிக்கு தேரால் இறக்குதல். 1.30 மணிக்கு பிராயச்சித்த அபிடேகமும் உச்சிக்காலப் பூசையும், 3.00 மணிக்கு சாயரட்சையோடு தேர்த் திருவிழா நிறைவுபெறும்.

கடந்த மாதம் 29 ம் திகதி ஆரம்பமான வருடாந்த மஹோற்சவத்தில் நாளை தீர்த்தமும், நாளை மறுதினம் பூங்காவனமும் நடைபெற்று வெள்ளிக்கிழமை வயிரவர் பொங்கலுடன் உற்சவம் முடிவடையும். (சு)

## தமிழ்மொழித் தினவிழா

(யாழ்ப்பாணம்)

''மொழி வளர்ச்சி மனித பண்பாட்டு வளர்ச்சியின் மூலவேர். எமது தாய்மொழியாகிய தமிழ் மொழியின் தனித்துவமான பண்புகளை தெரிந்து கொள்ளவும் மாணவர்கள் அனைவருக்கும் புதிய உற்சாகத்தையும், தமிழ் மொழிச் செயற்பாடுகளை புத்தெழுச்சியுடன் மென்மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கும் தமிழ் மொழித்தினவிழா வழிவகுக்கும்.''

இவ்வாறு கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்மொழித் தினவிழாவில் உரையாற்றிய யாழ். மத்திய கல்லூரி அதிபர் நா. க. சண்முகநாதபிள்ளை கூறினார்.

சைவபரிபாலன சபையைச் சேர்ந்த சட்டத்தரணி இராஜ இராஜேஸ்வரன் தங்கராசா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

திருமதி இரஞ்சினி இராஜ[illegible]வரன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

இவ்விழா அதிபர் கா. கணேசராசன் தலைமையில் நடைபெற்றது. பா. அ. ச உப செயலாளர் சி. கஜேந்திரநாத் நன்றி கூறினார்.

# காரைநகர், அனலைதீவிலிருந்து 12 நோயாளர், 8 உதவியாளர் யாழ். நகர் வந்துள்ளனர்

[யாழ்ப்பாணம்]

அனலைதீவு, காரைநகர் ஆகிய இடங்களிலிருந்து 12 நோயாளர்களும் அவர்களுக்கு உதவியாக 8 பேரும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

காரைநகரிலிருந்து கந்தமுத்து நடராசா (60 வயது வேலன் சுப்பன் [78 வயது). எஸ், சிவனருட்பிள்ளை [வயது 47], திருமதி வள்ளியம்மை செல்லத்துரை [60 வயது]வந்துள்ளனர்.

அனலைதீவிலிருந்து கர்ப்பிணித் தாய்மார்களான திருமதி சித்திராவதி ஜெகன் [வயது 29], திருமதி முத்துலட்சுமி ஐயம்பிள்ளை [வயது 38], திருமதி செல்வராணி சுந்தரலிங்கம் [வயது 30] திருமதி சிதம்பராதேவி கனகசபாபதி [வயது 32], திருமதி தவமலர் தர்மகுலசிங்கம் [வயது 27], திருமதி கமலா சுந்தரலிங்கம் [வயது 30] ஆகியோர் யாழ் பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் கந்தையா மயூரன் 12 வயது) 5–ம் வட்டாரம், கந்தையா இராமச்சந்திரன் [46 வயது] 2 ம் வட்டாரம், வீ. சின்னத்துரை [67 வயது) 2 ம் வட்டாரம் ஆகியோரும் வந்துள்ளனர். (56)

## இராசிபலன்

**17 03 1992**

**செவ்வாய்க்கிழமை**

**(தமிழுக்கு பங்குனி 40)**

சதுர்த்தசி: பின்னிரவு 2–25 வரை, மகம்: நண்பகல் 12–00 வரை, சித்தயோகம், இராகு காலம்: பகல் 3–19 முதல் 4-49 வரை, சுபநேரம்: காலை 10-49 முதல் 12-18 வரை.

மேடம்: நிதானம் தவறுதல், பிறர் குறை கேட்டல், சோம்பல்.

இடபம்: அவதூறு, அசட்டை மனப்பான்மை, உறவு பாதிப்பு.

மிதுனம்: மனத்துணிச்சல், சகோதர உறவு, பண வரவு.

கடகம்: வாழ்வில் திருப்பம், பேச்சாற்றல், குடும்ப பாசம்.

சிங்கம்: கோழைத் தனம். கேளிக்கை, அதிக வருமானம்.

கன்னி: வெளியேற்றம், தவறை எற்காமை, மனச் சபலம்.

துலாம்: பெரும் செலவு, பெரும் மகிழ்ச்சி, கஞ்சத் தனம்.

விருச்சிகம்: உணர்ச்சிப் படல், சமூக அந்தஸ்து, பெருமை.

தனுசு: கோபதாபம், மிதமான போக்கு, அலைச்சல்.

மகரம்: தொழில் சிக்கல், குடும்பவேற்றுமை, வெறுப்பு.

கும்பம்: தொழில் லாபம், சுபகாரியம், காரியசித்தி.

மீனம்: சொல் வன்மை, சடின உழைப்பு, அதிஸ்டம்.

- ஜோஸ்யர்

## முதலாவது இடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

கொத்தணி, கோட்டம், யாழ். மாவட்டம் அடங்கிய பாடசாலைக்கிடையே இடம் பெற்ற இப்போட்டி இறுதியாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

மேற்படி கல்லூரியின் அணி சார்பில் அதன் தலைவர்களாக முறையே செல்வன் ஜீ. சுஜீவன், செல்வன் ப. ரவிராஜசிங்கம் கடமையாற்றி பத்தொன்பது வயதிற்குட்பட்டோர் ஆண்கள் பிரிவில் 'உதயன்' வெற்றிக்கேடயத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

## "இணைப்பாட செயற்திட்டம் முக்கியமானது"

(வட்டுக்கோட்டை)

''சகல பாடசாலைகளிலும் இணைப்பாடச் செயற்திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். இணைப்பாட நிகழ்ச்சிகள்தான் மாணவர்களைப் பூரண மனிதர்களாக ஆக்கும் சக்திவாய்ந்தவை.

இவ்வாறு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பண்டத்தரிப்புக் கோட்டப் பிரிவு அதிபர்களுக்கான விசேட கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் கூறினார்.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.க.மகேசன், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏளான திரு. மு. சிவராசரத்தினம், திரு.மு. திருநீலகண்டசிவம் ஆகியோரும் இக்கூட்டத்தில்உரையாற்றினர். (139)

கி. சே. அ. பிரிவில்

## கைத்தொழில் அபிவிருத்தி

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமசேவை அலுவலர் பிரிவிலும் இருந்து இரண்டு பாரம்பரிய கைத்தொழில்கள் தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

வடக்கு–கிழக்கு மாகாண சபை யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமசேவை அலுவலர் பிரிவிலும் இருந்து இரண்டு பாரம்பரிய கைத்தொழில்களையும் ஒவ்வொரு கைத்தொழிலுக்கும் மிகத் திறமையாக செயலாற்றக்கூடிய ஐந்து பேரையும்தெரிவு செய்து அனுப்பி வைக்குமாறு யாழ், செயலக திட்டமிடல் பகுதியினருக்கு சுற்று நிருபம் ஒன்று அனுப்பிவைத்துள்ளது. (137)

## குழந்தைகள் விபரம் சேகரிப்பு

(சித்தன்கேணி]

சங்கானை பிரதேச செயலர் பணிமனைக்குட்பட்ட 25 கிராம சேவை அலுவலர் பிரிவிலும் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் விபரங்கள் அவ்வவ்பகுதி கிராம சேவை அலுவலர்களினால் திரட்டப்படுகின்றது.

வறுமை நிவாரண ஆணையாளரின் பணிப்பிற்கிணங்க வறுமை நிவாரண உணவு முத்திரைகள் பெறும் குடும்பங்களின் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக பால்மா வழங்குவதற்கே விபரங்கள் திரட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (137]

## வியாகுல அன்னை விழா

(ஊர்காவற்றுறை)

யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் உள்ள கல்வாரி மலைக்குகை வியாகுல அன்னை விழா ஏப்ரல் மாதம் 10ந்திகதி தபசுகால ஆறும் வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது. (59)

வளர்ப்பு

## நாய்களுக்கு நோய்த்தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கான விசர்நாய் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றல் தொடர்பான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை 30–ம் தேதிவரை நடைமுறைப்படுத்தப் படுத்துவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எந்தெந்த இடங்களில் எவ்வெப்போது என்பது பற்றிய விபரங்களை சுகாதாரப் பரிசோதகர்களிடமோ, சனசமூகங்களுக்குப் பொறுப்பானவர்களிடமோ, அல்லது யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலோ விசாரித்து அறிந்துகொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பஞ்சாபில் 18 பேர் சுட்டுக்கொலை

(சண்டிகார்)

பஞ்சாப் மாவட்டத்தில் லூர்தியா மாநிலத்தில் சீக்கிய தீவிர்வாதிகள் அண்மையில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 18பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

## மாவீரர் படிப்பகம்

(யாழ்ப்பாணம்)

சமகாலத்தில் வெளியிடப்படும் சிறந்த நூல்களையும், சஞ்சிகைகளையும் வாசிக்கும் வாய்ப்பினை தமிழ் மக்களுக்கு அளிக்கும் பொருட்டு புலிகளால் மாவீரர்படிப்பகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த நூல்களும், சஞ்சிகைகளும் இப்படிப்பகத்தில் சேர்க்கப்பட்டு, இரவல் கொடுக்கும் பகுதியும் இயங்கிவருகின்றது குறிப்பிடத்தக்கது.

## சுகாதாரவார நிகழ்ச்சிகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையின் சுகாதாரவார நிகழ்ச்சிகள் சனசமூக நிலையங்களின் அனுசரணைகளுடனும் பொது மக்களின் ஒத்துழைப்புடனும் நடைபெற்றது. (52)

## சிறுதானிய செய்கை

(யாழ்ப்பாணம்).

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் 'இன்றும் நாளையும்' என்ற விவசாய அபிவிருத்திக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் வளம் மிக்க செம்மண் பிரதேசங்களில் பயிரிடப்பட்டுள்ள புகையிலையின் அறுவடையைத் தொடர்ந்து சிறுதானியச் செய்கையை மேற்கொள்ள விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமெனவும், சிறுதானிய செய்கைக்கான விதையினங்களை விநியோகிப்பதில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபடுவது எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு சாரணர் இயக்கத்தினரால் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் சாரணர் ஆசிரிய கைநூல் வெளியீட்டு விழா இன்று 17–ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

வடமராட்சி பிரதிக் கல்விப் பாளர் திரு. க. செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் விநாயகர் தருமநிதிய நிறுவனர் திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (150)

## பேச்சுப்போட்டி

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களினால் சனசமூக நிலையங்களுக்கிடையில் நடாத்தப்படும் பேச்சுப்போட்டி இம் மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாவட்ட ரீதியில் நடைபெறும்.

சகல உதவி அரச அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாசமும் சமாசப்பிரிவு ரீதியில் பேச்சுப்போட்டிகளை நடாத்தி மாவட்ட மட்டத்திலான பேச்சுப் போட்டியாளர்களைத் தெரிவு செய்யவேண்டுமென்று கோரப்பட்டிருந்தது. (154)

## தவக்கால நற்சிந்தனை

தாழ்மையான உள்ளம் இறைவன் வாழும் இல்லம். தாழ்மை எமக்குப் பெருமை தரும். இதனையே இறை மகன் எமக்குப் போதித்தார், சாதித்தார். அவரது பேச்சும் செயலும் ஒன்றாக இருந்தது. 'தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்பெறுவான்.''

(மத். 23: 12)

மோ. தா[illegible]சியஸ்


## போத்தல்கள் தேவை

ஜாம், புரோடினேக்ஸ், கோடியல் (Cordial), சோஸ் (Saurce), பியர் [நெல்லிரசம்] போத்தல்கள் ரூபா 3/-க்கு மேல் எம்மால் கொள்வனவு செய்யப்படும்.

**TasteLine Industries(Pvt)Ltd**

No. 14, Seenier Lane, Jaffna. (சி-1991)

யா/வைத்தீஸ்வரா கல்லூரி

## பழைய மாணவர் மன்றம

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

காலம்:- 22 – 3 – 92 முற்பகல் 10-00 மணி

இடம்:- கல்லூரி மண்டபம்

பொதுக்கூட்டத்திலும் மதியபோசன விருந்திலும் அங்கத்தவர்களை கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தலைவர் / அதிபர், செயலாளர்.


(ஏ-1992)

# பண்ணாகம் விசவர்த்தனை
# முருகமூர்த்தி கோவில்
## தேர்த்திருவிழா சிறப்பு மலர்

செவ்வாய்க்கிழமை

17 03-1992

கந்தா, கடம்பா, கார்த்திகேயா. கலியுகவரதா, சரவணபவா, சண்முகநாதா, ஆறுமுகா, குமரா என்று பக்தர்களால் பல பெயர்களாலும் கூவி அழுதரற்றி அழைக்கப்படுகின்ற கண்கண்ட தெய்வமாகிய முருகமூர்த்தி விசவர்த்தனை தலத்தில் மக்கள் சிந்தாகுலம் தீர்க்க நந்தா விளக்காக எழுந்தருளி அருள் வழங்கிக் கொண்டிருக்கின்றார். இத்தலச் சூழல் ஆல், அரசு, மா, பனை, இலுப்பை, வில்வை, வேம்பு, தென்னை, அசோக் என்று இன்னோரன்ன பயன் தரு மரங்கள் அடர்ந்த சோலையாகவும் கழனிகளும் வயல்களும் நிறைந்த விளை நிலமாகவும் விளங்குவதனால் ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழமுதிர்சோலை என்று கூறத் தக்கதான சிறப்புடையதாம். இக்கோயில் யாழ்ப்பாணம் – காரைநகர் பிரதான வீதியில் 14 கி. மீ. தொலைவிலுள்ள



பண்ணாகம் என்னும் நல்லொழுக்கமும், உத்தமப் பண்பும் நிறைந்த மக்கள் வாழுகின்ற ஊரில் இருக்கின்றது.

இது ஏறக்குறைய 225 வருடங்களுக்கு முற்பட்ட பழமை உடையதும் மூர்த்தி, தல விசேடம் உடையதுமாகும். இக்கோவிலை தாபித்து வழிபாடுகளை நடத்திவந்த பரம்பரையிலுதித்த பெரியார் சின்னட்டியர் செல்லப்பா சிவபதம் அடைய அவர் சகோதரர் நாகமுத்து மகன் மாணிக்கம் இக்கோவிலை சிறப்பாக நடத்திவரும் வேளையில் 1954 ஆம் ஆண்டு தமது நிர்வாக உரிமையை ஊர்மக்கள் பொதுவாக்க விழைந்து விசவர்த்தனை முருகமூர்த்தி கோவில் பரிபாலன சபையாரிடம் மிகவும் கண்ணியமாக கையளித்தார்.

அன்றிலிருந்து சபையார் சைவாகம விதிமுறை பிறழாது கோவிலை நடத்தி வருவதுடன் கோவிலைப் புதுக்கியும் புதிய மண்டபங்களமைத்து விஸ்தரித்தும் மிகவும் அழகாக விளங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாவற்றையும் மிகவும் சிறப்பாக செய்து வருகின்றனர். வேண்டுவார்க்கு வேண்டிய அனைத்தையும் அவ்வவர் பக்குவம் அறிந்து ஈந்து கவலையைப்போக்கி களிப்பினை அவர் உள்ளத்தில் தேக்கி, ஒப்பாரும் மிக்காரும் இன்றி வள்ளி தெய்வயானை சமேதராக ''யாமிருக்க பயம் ஏன்'' என்று கூறுவது போல அபயக்கரம் காட்டி வீற்றிருந்தருளி அருள் வழங்கிக் கொண்டிருக்கிறார் முருகமூர்த்தி. அவரை திரிகரண சுத்தியோடு பக்தி வைராக்கியம் கொண்டு வழிபடின் வாராத செல்வமெல்லாம் வந்து சேரும் என்பதற்கு ஐயமில்லை. தடைப்பட்ட காரியமெல்லாம் சித்தியாகும். அவர் மந்திரமும் தந்திரமும் மருந்துமாக இருந்து அருள் வழங்கிக் கொண்டிருக்கின்றார். பூமாலைகளை அணிந்து பொலிந்த திருமுகத்துடன் கருணைமழை பொழியும் கண்களுடன் எம்பெருமான் அன்பர், அருட்

### "திரிகரண சுத்தியோடு பக்தி வைராக்கியம்கொண்டு வழிபடின் வாராத செல்வமெல்லாம் வந்து சேரும்"

புலவர் ஆறுமுகம் அருட் பாடல்களாகிய பாமாலைகளையும் ஏற்று அணிந்து அருள் வழங்கிக்கொண்டிருக்கிறார். முருகப்பெருமானின் பிரவாகத்தையும், திருவருட்திறத்தையும்பற்றிமிக அழகாக பக்திச் சுவை நனிசொட்ட இவர் பாடிய பிள்ளைத்தமிழ் பாடல்கள் பலராலும் ஏற்றிப் போற்றி புகழப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தப் பெருமானுக்கு ஆண்டுதோறும் பங்குனித் திங்களில் பெருந் திருவிழாக்கள் நடைபெறுவது வழக்கம். அவ்வாறாக இவ்வாண்டும் மாசி மாதம் 25ம் நாள் (08-03-92) ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் திருவிழாக்கள் ஆரம்பமாகி நடைபெறுகின்ற பத்தாம் திருவிழாவாகிய இன்று பங்குனி மாதம் 4ம் நாள் (17 – 03 – 1992) செவ்வாய்க்கிழமை பூர நட்சத்திரத்தில் தேர்த் திருவிழா நடைபெற திருவருள் பாலித்துள்ளது. தேர்த் திருவிழா அதிகாலையிலேயே சகல கிரியைகளுடனும் ஆரம்பமாகிவிடும். விநாயகர், மூலத்தான மூர்த்தி, வைரவர் ஆகிய மூர்த்திகளுக்கு அபிடேகமாகி பூசைகளும் முடிந்தபின்னர் வசந்தமண்டபத்தில் 10 மணியளவில் ஷண்முகார்ச்சனையும் பூசைகளும் நடைபெற்று எம்பெருமான் சிங்காசனத்தமர்ந்து உள்வீதியில் அசைந்தாடி வருவார். தென்வீதியில் வரும்பொழுது கோவில் ஆதிமூர்த்தியான வயிரவப் பெருமானுக்கு பூசை நடைபெறும். வீதியுலாவின்போது வாத்தியக்காரரும், கற்பூரச்சட்டி ஏந்தி தத்தமது நேர்த்திகளை நிறைவேற்றுவோரும், மலர்களால் மலர் மழை பொழிபவர்களும், ஆலவட்டங்கள், குடைபிடிப்போர், தீவட்டி ஏந்துவோர் முன்னே செல்ல இனிய கானத்துடன்கூடிய இன்னிசைத் தேவாரப் பண்களைப் பாடிப்பரவுவோரும், அங்கப்பிரதட்சணம் செய்யும் ஆண்களும், அடியளிக்கும் பெண்களும் அரோகரா என சிவ ஒலிபெருக்கும் பக்தர்கள் கூட்டம் பின்னேவர ஆறுமுகப்பெருமான் எழுந்தருளி ஆடியசைந்து வரும் காட்சி கண்டோர் உள்ளத்தை உவகைக் கடலில்ஆழ்த்தி உணர்வு வசப்பட்டு மெய்மறந்து பக்திப் பரவசமூட்டும் தன்மையது. முருகப் பெருமான் உள் வீதியால் வெளிவீதிக்கு எழுந்தருளும்போது முன்புற மண்டபத்தில் காந்தரூபர்களான மலர்மாலை சூட்டப்பெறும். முருகப்பெருமான் அங்கிருந்து தேருக்கு எழுந்தருளுவார். இச்சித்திரத்தேர் எம் ஊரவர்களால் (இங்கிருப்பவர்கள், மலேசியா, சிங்கப்பூர் வாசிகள்) ஏறக்குறைய 25 வருடங்களுக்கு முன் பெரும் பொருட்செலவில் மிகவும் சிறந்த சித்திர வேலைப்பாடுகளுடன் அருமையாக ஆக்கப்பெற்றது. இதனை நாம் எமது கண்ணே போல் அழியவிடாது பாதுகாத்துவைக்கும் கடப்பாடுடையோம். இதனை காலத்துக்குக்காலம் வேண்டிய திருத்தங்களை செய்து புதுக்கியும் மைபூசியும் அழகுகுன்றா வண்ணம் வைத்திருக்கவேண்டியது நம் கடமையாகும். தேரில் பூசை, அருச்சனைகள் நடைபெற்று பின் சிதறுதேங்காய்கள் அடிக்கப்பெறும். அதன் பின்னர் அடியார்கள் 'அரோகரா' என்ற சிவ ஒலியுடன் வயது வேற்றுமையின்றி வடம் பற்றி தேரை இழுப்பார்கள். தேரில் கட்டப்பட்ட மணிகளின் கிண்கிணியோசைகள் எங்கும் ஒலிக்க மக்களின் குரலோசையும் அதில் சேர்ந்து ஒலிக்க ஆறுமுகப் பெருமான் எழுந்தருளிய அழகான தேர் மக்கள் வெள்ளத்திடை ஆடியசைந்து ஊர்ந்து செல்லும். வீதிகளில் பந்தல்கள் வைத்து சுவாமியை வரவேற்று வழிபாடு செய்வர். தேர்சுற்றிவந்த பின்னர் சண்முக அர்ச்சனைகள்நடைபெற்று முருகமூர்த்தி தமது இருப்பிடத்திற்கு எழுந்தருளுவார். அடுத்த நாளாகிய 18-3-1992 இல் உத்தரத்தோடு கூடிய பூரணையில் தீர்த்தத்திருவிழா நடைபெறும். அத்துடன் தேர், தீர்த்தம் அன்று அன்னதான சபையினரின் மகேசுர பூசையும் மிகவும் சிறப்பாக இடம்பெறும்.

இந்தவேளையில் ஆண்டவனின் அருட்சிறப்புக்களையும் நாம் சற்றுச் சிந்திக்கவேண்டும். இவ்வுலகில் மாந்தர் வாழ்வு கடலில், கலத்தில் யாத்திரை செய்வது போன்றது, புயல் வீசினால் கலம் கவிழ்ந்து அமிழ்ந்துவிடும். ஆனால் நீந்தத்தெரிந்தவர்கள் கலம் கவிழ்ந்தாலும் நீந்தி கரைசேர்ந்து விடுவார்கள் அதுபோல துயரமும், துன்பமும், அல்லலும், அவலமும், பயமும் நிறைந்த இந்த உலக வாழ்க்கையில் எம்மைஎல்லாம் காத்து இரட்சிக்கும் குமரவேளின் திருமுன் நின்றால் அவர் தேரில் அமர்ந்து அருள் செய்யவரும் திருக்கோல காட்சியைக் கண்டால் எம்மை வாட்டி வதைக்கின்ற அவத்தைகளில் நின்றும் விடுபட்டு மனநிம்மதி அடைவதற்கு தடையேதும் இருக்கமாட்டாதல்லவா? அவனன்றி ஓரணுவும் அசையாது. அவர் உண்மை, அறிவு அன்பாக அமர்ந்திருக்கிறார். பேறும் தவம் சற்றும் இல்லாத எம்மையெல்லாம் மாயாகாரியமாகிய பிரபஞ்சப்பற்றினின்றும் நீக்கி முத்தியடைந்து கடைத்தேறுவதற்கு ஏற்ற நெறியாகிய அருள்வழி நிற்கச்செய்யவே ஆண்டுதோறும் ஆறுமுகன் தேரில் அமர்ந்து அன்பர்களை ஆட்கொள்ளுகின்றான். முருகமூர்த்தி தமது ஞானப்படையாகிய வேலாயுதத்தால் மல கன்மங்களை நீக்கி ஆன்மாக்களை உய்தி பெறச்செய்யவே காட்சி கொடுக்கின்றார். அதனைக் பெறுதற்கரிய பிறவியை பெற்றநாம் பெறுதற்கரிய எம்மானின் திருத்தோற்ற பொலிவைக்கண்டு அவன்பாதாரவிந்தங்களைகுறுகிப்பணிந்துபெரும்பேறு அடைவோமாக.

**சைவமணி சோ. க. வேலாயுதர்**

மலர் அமைப்பு:

**பண்ணாகம் அண்ணா கலை மன்றம்**

### "பண்ணாகம் விசவர்த்தனை முருகன் சித்திரத்தேரில் பவனிவரும் நன்நாளில் எமது வாழ்த்துக்களை அனைவருக்கும் வழங்குகின்றோம்"


மூவிரு முகத்துமுதல்வா போற்றி
**அம்பாள் ரேடர்ஸ்**
வழக்கம்பரை.

விசவர்த்தனைக் காவலா போற்றி
**பண்ணாகம் ஸ்ரீ முருகன் அன்னதான சபை**
பண்ணாகம்.

எழில் வேந்தே குமரா சரணம்
**வட்டு. தொகுதி தெ. பனம் பொ. உ. வி. கூ. சங்கம்**
சங்கானை.

கந்தா கலியுகவரதா சரணம்
**மல்ரி சொப்**
வழக்கம்பரை.

**திருமொழி அச்சகம்**
சங்கானை

**இ. குணதீஸ்வரன்**
பனிப்புலம், பண்டத்தரிப்பு.

**வி. மயில்வாகனம்**
பண்ணாகம்.

**தனம் ஸ்ரோர்ஸ்**
பண்ணாகம்.

தமிழீழ மக்கள் நலம்பெற விசவர்த்தனை முருகன் அருளை வேண்டுகின்றோம்.
**சங்கானை ப. நோ. கூ. சங்கம்**

**ம. துரைசிங்கம்**
பண்ணாகம்.

**ஹேமா ஸ்ரோர்ஸ்**
பண்ணாகம்.

**பால. மனோகரன்**
பண்ணாகம்.

**அ. திருநாவுக்கரசு**
கலர்படப்பிடிப்பாளர்
பண்ணாகம்.

**வி. தவக்குமார்**
பண்ணாகம்.

**இ. துரையப்பா அன் சன்ஸ்**
தொல்புரம்.

**வெ. கலையழகன்**
பண்ணாகம்.

**சந்திரன் மில்**
தொல்புரம்.

**பண்ணாகம் கூட்டுறவு சகாய விலைக் கடை**
பண்ணாகம்.

**கல்கீஸ் கபே**
சுழிபுரம்.

**மயூரன் குரோசறி**
வழக்கம்பரை.

**உதயசூரியன் கபே**
சங்கானை.

**பொ. இளையதம்பி**
பண்ணாகம்.

**இரத்தினம் ஸ்ரோர்ஸ்**
பண்ணாகம்.

**க. இராஜசிங்கம்**
சித்தன்கேணி.

# பொறுப்புக்களை அனைவரும் சுமந்தால்தான் விடுதலை

**- யோகி**

(யாழ்ப்பாணம்)

"பொறுப்புக்களை அனைவரும் சுமந்தால்தான் விடுதலையை நாம் விரைவில் அடையலாம்".

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் 12-வது ஆண்டு கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமும் தமிழீழ கல்வித்துறை பொறுப்பாளருமான யோகரத்தினம் யோகி குறிப்பிட்டார். விழா, யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நேற்று நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது! எவ்வளவோ இழப்புக்கள் நடந்த பின்வு விட்டுக் கொடுத்து தீர்ர் காண வேண்டுமென்று சிலபு கருதுகிறார்கள். ஆனால் விட்டுக்கொடுத்து தீர்வு காண முடியாது. (சு)

## பரீட்சை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் 1991ம் ஆண்டுக்கான பரீட்சைகள் நேற்று தொடக்கம் நடைபெற்றுவருகின்றன. (சு)

தொண்டர் ஆசிரியர்

## இன்று பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தை சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களும் கல்வி வளர்ச்சிக் கழக ஆசிரியர்களும் இன்று பாடசாலைகளுக்குச் செல்லாது பகிஷ்கரிப்பு நடாத்தப் போவதாக அறிவித்துள்ளனர்.

இப்பகிஷ்கரிப்பில் சகல பாடசாலை மாணவர், ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

தமது முயற்சி பலனளிக்காது போனால் யாழ். கல்வித் திணைக்களத்தில் மறியல் போராட்டம் நடாத்தப் போவதாகவும், அதுவும் பலன் அளிக்காதுபோனால் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வரை அப்போராட்டம் தொடரும் எனவும் அறிவித்ள்துளார். (சு)

### க பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

பரீட்சை நேரத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் தேவையற்ற கஷ்டங்களையும் கடைசி நேர நெருக்கடிகளையும் தவிர்க்கும் பொருட்டு மேற்படி நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் இதுசம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்று சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தனிப்பட்ட முறையில் மேற்படி பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் தமது தேசியஅடையாளஅட்டையை பெறவேண்டுமாயின் அவ்வப் பகுதி கிராம சேவையாளர் மூலம் அத்தாட்சிப்படுத்தப் பட்டு விண்ணப்பம் அனுப்பப்படவேண்டுமெனவும் தெரிவித்தார். (க)

## கல்லூரி தினம்

(யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி தினம் இன்று கொண்டாடப்படுகின்றது.

இன்று காலை 7–00 மணிக்கு மேற்படி கல்லூரி தேவாலயத்தில் நடைபெறும் திருப்பலிப் பூசையில் மாணவர், ஆசிரியர், பழைய மாணவர், பெற்றோர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (வி)

## இல்ல மெய்வல்லுனர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று திங்கட் கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்துக்கு பாடசாலை அதிபர் வ. கயிலேஸ்வரன் தலைமை வகித்தார். சாவகச்சேரி வடநகர் கொத்தணி அதிபர்க. சந்திரசேகரா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

### கடற்றொழிலாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறவுள்ளது.

19ம் திகதி காலை 8 மணிக்கு இந்த ஊர்வலம் மானிப்பாய் அர்ச்.அந்தோனியார் கோவில் முன்றலிலிருந்து ஆரம்பமாகி சண்டிலிப்பாய்உதவிஅரசாங்க அதிபர் பணிமனைக்கு சென்று மகஜர் ஒன்று கையளிப்படவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் சகல கடற்றொழில் சங்கங்களும் கலந்துகொள்ள விருப்பது குறிப்பிடத்தக்கது. (வி)

### மருந்துகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனல் சலரோக நோயாளர்கள் வெளிக்கடைகளில் அதிக விலைகொடுத்து வாங்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. அண்மையில் கப்பலில் இம்மருந்துகள் அரசினுல் அனுப்பிவைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (56)

### க. பொ. த. (உயர்தர)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பரீட்சைக்கான எழுது கருவிகள் மற்றும் பொருட்கள் கப்பலில் வருவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரியவருகிறது. [சு)

### வேலைவாய்ப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடிகை மூலம் சைப்பிரஸ் நாட்டிற்கு தாதி வேலைக்காக அனுப்பப்பட்ட இளம் யுவதி ஒருவர் நாடு திரும்பி கொடுத்ததகவல்களை அடுத்தே இந்த நடிகை கைதானர்.

சைபிரஸ் நாடு சென்ற யுவதியை நபர் ஒருவர் ஹொட்டல் ஒன்றில் "கபரே" நடனத்திற்காக பயன்படுத்த எத்தனித்ததாகவும் இதனல் தான் ஏமாற்றப்பட்டு நாடு திரும்பியதாகவும் இந்தஇளம் யுவதி முறையிட்டுள்ளார்.

இவ்வாறு 20 இளம் யுவதிகளை தாதி வேலைக்கெனவேலை பெற்றுத் தருவதாக கூறி, இந்த நடிகை பணம் பெற்றுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக நடிகையின் கணவரும் தைாகி விடுதலை செய்யப்பட்டுள்ளார். (கே)

### அரசுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூங்காவிலிருந்து ஆரம்பித்துள்ளார்கள்.

எதிர்க் கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா இந்த பாதயாத்திரைக்கு தலைமை வகித்து செல்கிறார்.

எதிர்க்கட்சி ஆதரவாளர்களும், தொழிலாளர்களுமாக சுமார் 13 ஆயிரம் மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

கொழும்பிலிருந்து கதிர்காமம் வரையிலான சுமார் 300 கிலோ மீற்றர் தூரம் இப்பாதயாத்திரை மேற்கொள்ளப்படுகிறது. (கே)

## புலிகள் விவகாரத்தை இந்திய அமைச்சரவை ஆராய்கிறது — சவான்

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக சந்தேகிக்கப் படும் விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனையும் பொட்டு அம்மானையும் கைது செய்தே ஆகவேண்டுமென்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் ராஜீவ் காந்தி கொலை விசாரணை மெத்தனமாகப்போவதாக ஆளும் கட்சி உறுப்பினர்களும், சில எதிர்க் கட்சி உறுப்பினர்களும் நேற்று கருத்துத் தெரிவித்த போது உள்துறை அமைச்சர் குறுக்கிட்டு, புலிகள் இயக்கத்தைதடைசெய்வதுகுறித்து அமைச்சரவையின் அரசியல் விவகாரக்குழு பரிசீலனை செய்வதாகக் கூறினர்.

இவர்களைக் கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டுவருவதுபற்றி இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடைபெற்று வருகிறது என்றும் அவர் மேலும் கூறினர்.

இதேவேளை, தமிழக எதிர்க் கட்சித் தலைவர் திரு.எஸ்.ஆர். பாலசுப்பிரமணியமும், தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தியும் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யவேண்டுப் எனவும் கேட்டுள்ளனர்.

## போஷாக்கின்மையால் 12 மாணவர் கண்பார்வை பாதிப்பென கண்டுபிடிப்பு

(மானிப்பாய்)

போஷக்கின்மை காரணமாக ஆனைக்கோட்டையில் 12 மாணவர்களுக்கு ண் பார்வை குன்றியிருப்பது கண்டுபிடிக்சப்டட்டுள்ளது.

ஆனைக்கோட்டை பாலசுப் பிரமணிய வித்தியசாலையில் கல்வி பயிலும் மாணவர்களை அண்மையில் வைத்திய பரிசோதனை செய்தபோது இம் மாணவர்களுக்கு போஷாக்கு இல்லாததன் காரணமாக உடல் நலக்குறைவுடன் கண் பார்வை குன்றி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தற்போது இம்மாணவர்களை யாழ். போதனு வைத்தியசாலைக்குச் சமுகமளிக்குமாறு வைத்தியர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

### வடமராட்சி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நேற்றுக்காலை சுமார் ஆறு மணியளவில் வடமராட்சி பகுதியில் விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

பருத்தித்துறையில் வெளிச் சக்கூடு முனைப்பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோரின் குடியிருப்புக்களின் மீது இரு பொம்மர்கள் ஐந்து தடவைகள் குண்டுகளை வீசின. பொம்மர்களின்வருகையினை தெரிந்தவுடன் அவ்வீடுகளில் உள்ளோர் வெளியேறியதால் உயிர் இழப்புகள் தவிக்கப் பட்டன.

அடுத்து வல்வெட்டித்துறை குடிப்பகுதியில் குண்டு வீச்சு தாக்குதல் நடைபெற்றதில் பச்சைவீடு என்றழைக்கப் படும் முத்துலிங்கம் அமிர்தலிங்கம் என்பவருடைய வீடு தரைமட்டமானதுடன் முத்துலிங்கம் [வயது 34) என்பவர் படுகாயத்துடன் வைத்திய சாலையில் சேர்கப்பட்டு பின் அங்கு மரணமானர்.

தோட்டத்தில் வேலை செய்து கொண்டுருந்த கம்பர் மலையைச் சேர்ந்த சண்முகம் அருணசலம் (வயது 65) என்பர் காயத்துடனும் மந்திகை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ரேவடி, வேம்படி போன்ற இடங்களில் பொம்மர்களும் அவ்ரோ விமானங்களும் இணைந்து மேற்கொண்டதாக் குதலில் எல். ரகுமான் என்பவரது விடு முற்ருகச் சேதமானதுடன் கடற்கரையில் அமைந்துந்துள்ள வேளாங் கன்னி மாதாவின் ஆலயமும் சிறுசேதமடைந்தது. இதன் போது ஆறுமுகசாமி ஸ்ரீதரன் (வயது 20), சபாரத்தினம் சந்திரன் (வயது 24) என்பவர்களும் படுகாயத்துடன் அம்புலன்ஸ் மூலம் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கடற்படையினரின் வீரயாசூரயா தாய்க்கப்பல் தலைமையின் கீழ் நான்கு அதிவிசைப் படகுகளும் கடற்படை சிறு கப்பல்கள், மூன்று பிளாஸ்ரிக்படகுகளும் மக்கள் குடியிருப்புகளைநோக்கி பீரங்கித் தாக்குதலுடன் ஆட்லறிஷெல் தாக்குதலையும் மேற்க்கொண்டன.

பிற்பகல் 1.30 மணியளவில் அவ்ரோ விமானமொன்று தொண்டமனுறுப் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குடியிருப்பு ள் மீது குண்டுகளை வீசி தாக்கியதில் பல வீடுகள் சேதமடைந்தன. இதே நேரம் பலாலி இராணுவ முகாமிலிருந்தும் இப்பகுதிகளை நோக்கி இடைவிடாது ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (வி.51)

### வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா செலவில் மறுசீரமைக்கப்பட்ட மேற்படி வாடிவீட்டைப் பெரும்பாலும் இராணுவ அதிகாரிகளே பாவித்து வருவதாகக் கூறப்படுகிறது. (வி)

### மணலாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன் தினம் காலை சிலோன்தியேட்டர் இராணுவ முகாமிலிருந்து 600 யார் தொலைவிலுள்ள இராணுவ காவலரண் விடுதலைப்புலிகள் தாக்கியதில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார், படுகாயமடைந்த மற்றைய சிப்பாய்கள் அருகிலுள்ள முகாமுக்குள் தப்பியோடி விட்டதாககவும் தெரிவிக்கப்படுகிறது,

இதற்கு முன்னர் இராணுவத்தினர் வழமையாகச் செல்லும் பாதையில் விடுதலைப்புலிகள் தாக்குவதற்குப் பதுங்கியிருந்த போதிலும்,இராணுவத்தினர் வேறு பாதையால் முகாமுக்குள் சென்றதினுலேபே மேற்படிகாவலரண் புலிகளால் தாக்கப்பட்டது.

இத்தாக்குதலின்போது புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுங்களின் விபரம்வருமாறு: ரி.56 ரகத் துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள்–12, நடுத்தர ரவைகள்–1460, தொடர்ரவைகள்-300, ஜே. ஆர். கைக் குண்டுகள்-10 உட்பட வேறு இராணுவ தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன. [வி]

## தொழிலாளர் கூட்டம்

(வட்டு கோட்டை)

காரைநகர் மத்தி கட்டிடத் தொழிலாளர் சங்கப் புனரமைப்புக் கூட்டம் நாளை 18-ந் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் திரு. கி. பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (139)

## யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரிகளின் வேலைகள் பரவலாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் விளையாட்டு உத்தியோகத்தர் பற்ருக்குறையால், தற்போது சேவையில் உள்ள விளையாட்டு உத்தியோகத்தர்களின் வேலைகள் மேலும் பரவலாக்கப்பட்டுள்ளது.

உதைபந்தாட்டப் பயிற்சியாளருக்கு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தெல்லிப்பளை சாவகச்சேரி ஆகிய இடங்களும், மெய்வல்லுநர் பயிற்சியாளருக்கு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தெல்லிப்பளை தீவகப் பகுதிகளை உள்ளடக்கிய இடங்களுக்கும் பரவலாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்துடன் நல்லூரும், சண்டிலிப்பாயுடன் பருத்தித்துறை கரவெட்டிப் பகுதிகளும், தெல்லிப்பழையுடன் சங்கானை உடுப்பிட்டிப் பகுதிகளும், கோப்பாயுடன் சாவகச்சேரிப் பகுதிகளும் பரவலாக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான கூட்டம் கடந்த வாரம் யாழ்.செயலகத்தில் வடக்கு – கிழக்கு மாகாண சபை பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படிக் கூட்டத்துக்கு திருமலையிலிருந்து விசேடமாக வருகை வந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் கல்வி கலாச்சார விளையாட்டுத்துறையின் சிரேஷ்ட உத்தியோகஸ்தர் திரு. ஏ. எஸ். குணரட்ணமும் சமுகம் கொடுத்திருந்தார்.

இக்கூட்டத்தின் முடிவில், விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு 30 ஆயிரம் ரூபா மதிப்புள்ள விளையாட்டுச் சாதனங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன. (வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number P/'0336/91